## 01. கட்டிட திட்ட வரைபு அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் (கட்டிட அனுமதி)

டிஜிட்டல் தரவுகளைப் பயன்படுத்துதல்

இலத்திரனியல் செய்திகள் / கொடுக்கல் வாங்கல்கள் (SMS / WhatsApp / e-mail)

உள்ளூராட்சி மன்றங்களின் இணையத்தளத்தில் அல்லது முன் அலுவலகத்தில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக் கொண்டு அறிவுறுத்தல்களுக்கமைய பூரணப்படுத்தி முன் அலுவலகத்தில் ஒப்படைத்தல்.

பொறுப்பு: விண்ணப்பதாரி

↓

பூரணப்படுத்திய விண்ணப்பப்பத்திரத்தை பொறுப்பேற்று முன்கூட்டியே கட்டணத்தை அறவிடுதல், பற்றுச்சீட்டு மற்றும் தொடர்பு இலக்கத்தை வழங்குதல், விண்ணப்பப்பத்திரத்தை பொறுப்பேற்றதாகவும் பரிசோதனைக்கு வருகின்ற திகதியை அறிவித்தல்.

பொறுப்பு: முன் அலுவலக உத்தியோகத்தர்

↓

விண்ணப்பப்பத்திரத்தை விடய உத்தியோகத்தர் ஊடாக தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு சமர்ப்பித்தல்.

பொறுப்பு: முன் அலுவலக உத்தியோகத்தர்

↓

களப்பரிசோதனைக்கு வரும் திகதியை விண்ணப்பதாரிக்கு உறுதிப்படுத்துதல்.

பொறுப்பு: தொழில்நுட்ப உத்தியோகத்தர்

↓

களப்பரிசோதனைகளை மேற்கொண்டு, அவதானிப்பு மற்றும் சிபாரிசு அறிக்கை உள்ளடங்கிய கோவையை விடய உத்தியோகத்தரிடம் சமர்ப்பித்தல்.

பொறுப்பு: தொழில்நுட்ப உத்தியோகத்தர்

↓

விண்ணப்பம் சிபாரிசு செய்யப்பட்டதா?

**இல்லை** →

பூர்த்தி செய்யப்படவேண்டிய தேவைப்பாடுகளை அறிவித்தல்.

பொறுப்பு: விடய உத்தியோகத்தர்

↓

தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டதாக அறிவித்தல்.

பொறுப்பு: விண்ணப்பதாரி

(விண்ணப்பப்பத்திரத்தை விடய உத்தியோகத்தர் ஊடாக தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு சமர்ப்பித்தல் என்ற படிக்குத் திரும்புதல்)

**ஆம்** →

அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்தை வழங்குதல் தொடர்பான தீர்மானத்தை எடுத்தல்.

பொறுப்பு: திட்டமிடல் குழு

↓

அனுமதிக் கப்பட்டதா?

**இல்லை** →

அமைச்சருக்கு மேன்முறையீடு செய்தல்.

பொறுப்பு: விண்ணப்பதாரி

**ஆம்** →

அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் மற்றும் அனுமதிக்கப்பட்ட திட்டத்தை முன் அலுவலகத்திற்கு சமர்ப்பித்து விண்ணப்பதாரிக்கு அறிவித்தல்.

பொறுப்பு: விடய உத்தியோகத்தர்

↓

அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் மற்றும் அனுமதிக்கப்பட்ட திட்டத்தை விண்ணப்பதாரிக்கு ஒப்படைத்தல்.

பொறுப்பு: முன் அலுவலக உத்தியோகத்தர்

செயலாற்றுகை சுட்டி

## 01. கட்டட திட்ட வரைபு அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.

### 1. அறிமுகம்

உள்ளூராட்சி மன்றங்களின் எல்லைக்குள் மேற்கொள்ளப்படுகின்ற நிருமாணப் பணிகளை ஒழுங்குபடுத்துவதற்காக அங்கீகரிக்கப்பட்ட சட்டதிட்டங்கள் ஊடாக அந்த எல்லைக்குள் வசிக்கின்ற மக்களது சுகாதாரம், ஆரோக்கியம், வசதிகள் மற்றும் நலனோம்பல் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தும் சட்டரீதியான அதிகாரம் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரப் பிரதேசத்திற்குள் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து நிருமாணப் பணிகளும், உள்ளூராட்சி மன்றங்களினால் வழங்கப்படுகின்ற நிருமாண அனுமதிப்பத்திரத்தின் கீழ் மட்டுமே மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இந்த அனுமதிப்பத்திரத்தை வழங்கும்போது ஆரோக்கியம், சுகாதாரம், மற்றும் நலனோம்பல் வசதிகள் தொடர்பில் விதிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

### 2. சட்ட அதிகாரம்

a) நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் ஒரு பகுதி “நகர்ப்புற அபிவிருத்திப் பகுதி“ என அறிவிக்கப்பட்டால், 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் ஆண்டின் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பகுதி II A பொருந்தும்.

b) 1986.03.10 வர்த்தமானி இலக்கம் 392/9 இல் நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் கீழ் அமைச்சரினால் அமுல்படுத்தப்பட்ட ஒழுங்குமுறைகள்.

c) 2021.07.08 இன் கூடுதல் சாதாரண வர்த்தமானி இல 2235/54 மூலம் நகர்ப்புற அபிவிருத்தி அதிகாரசபை திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி ஒழுங்குமுறைகள்

d) ஒரு பகுதி “நகர்ப்புற வளர்ச்சிப் பகுதி“ என அறிவிக்கப்படாவிட்டால், 1915 ஆம் ஆண்டின் வீடு மற்றும் நகரத்தை மேம்படுத்துதல் கட்டளைச்சட்டம் 19 இன் 5 மற்றும் 6 பிரிவுகள் பொருந்தும்.

e) மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 127 மற்றும் 128 (அத்தி 252)

f) 268 ஆம் அதிகாரமான வீடுகள் மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டம்

3. **கட்டிட அனுமதியின் செல்லுபடியாகும் காலம்**

ஒரு வருடம். 1978 ஆம் ஆண்டு 41 இல நகர அபிவிருத்தி அதிகாரசபை கட்டளைச்சட்டப்பிரகாரம் கட்டிட அனுமதி இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கப்படலாம். ஏதேனும் நிருமாண அனுமதிப்பத்திரத்தை அனுமதிக்கும்போது, விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் அல்லது வரையறைகள் ஏதேனும் இருப்பின் அதற்கு உட்படுதல் வேண்டும்.

நிருமாண அனுமதிப்பத்திரத்தின் ஊடாக அனுமதிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்குப் புறம்பாக மேற்கொள்ளப்படுகின்ற எந்தவொரு நிருமாணத்திற்கும் அல்லது மாற்றங்களுக்கும் எந்தவிதத்திலும் இடமளிக்கப்படாததுடன், அந்த அனைத்து நிருமாணங்களும் அல்லது மாற்றங்களும் சட்டரீதியற்ற நிருமாணங்களாகக் கருதப்படும்.

**குறிப்பு:** வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் கீழ் நிருமாணிக்கப்பட்ட கட்டிடத்தைப் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு முன்னர் இணக்கச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். (இது தொடர்பான நடைமுறைகள் பிறிதாகக் காட்டப்பட்டுள்ளன)

4. **தகைமை**

(அ) உள்ளூராட்சி மன்றத்தின் எல்லைக்குள் காணப்படுகின்ற ஒரு காணியாக இருத்தல்.

(ஆ) விண்ணப்பதாரர் சொத்தின் சட்டரீதியான உரிமையாளராக இருத்தல். அல்லது அவரது அட்டோர்னி தத்துவத்தை பெற்ற ஒரு நபராக இருத்தல்.

(இ) உள்ளூராட்சி மன்றத்தினால் வரிப்பணம் அறவிடப்படுகின்ற ஒரு வலயத்திற்குள் காணி இருக்குமாயின், உரிய சொத்தின் சட்டரீதியான உரிமை உள்ள நபரது பெயர் ஆதனவரி அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும். (மதிப்பீட்டு அறிக்கையில் பெயரை உள்ளடக்கும் பொருட்டு சொத்து உரிமையை பதிவு செய்து கொள்ளும் நடைமுறையைப் பார்க்கவும்)

(ஈ) (i) வீடுகள் மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்திற்குட்படும் பிரதேசத்திற்குள் மேற்கொள்ளப்படுகின்ற நிருமாணப் பணியெனின், வீடுகள் மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் உப அட்டவணையில் காட்டப்பட்டுள்ள சட்டங்களுக்கமைய நிருமாண திட்ட வரைபுகள் வரையப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) நகர அபிவிருத்தி பிரதேசத்திற்குள் மேற்கொள்ளப்படுகின்ற நிருமாணமாக இருக்கும் பட்சத்தில், 1978ஆம் ஆண்டு 41ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட 2021 ஆம் ஆண்டு நகர அபிவிருத்தி அதிகாரசபை திட்டம் மற்றும் கட்டிடங்கள் கட்டளைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கமைய வரையப்பட்ட நிருமாணத் திட்டமொன்று இருத்தல் வேண்டும் என்பதுடன், உரிய காணியின் சுவட்டு வரைபடம் அந்த கட்டளைகளுக்கமைய அனுமதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

5. கட்டணம்

**(செயன்முறைக் கட்டணம் பின்வருமாறு)**

**(அ)** நகர்ப்புற அபிவிருத்திப்பகுதியென நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தினால் அறிவிக்கப்பட்ட பகுதிக்கு கீழ்வருமாறு கட்டணங்கள் அறவிடப்படும்.

| தரை பகுதி (சதுர மீட்டர்கள்) | குடியிருப்பு உபயோகம் (ச.மீ.க்கு) | | குடியிருப்பு அல்லாதது |
|---|---|---|---|
| | தனிப்பட்ட | அடுக்குமாடி இல்லங்கள் | |
| 400 வரை | ரூ.20/- | ரூ.25/- | ரூ.25/- |
| 401- 1000 | ரூ.22/- | ரூ.27/- | ரூ.27/- |
| 1001- 1500 | ரூ.25/- | ரூ.30/- | ரூ.30/- |
| 1501-2000 | ரூ.25/- | ரூ.32/- | ரூ.32/- |
| 2000க்கு மேல் | ஒவ்வொரு 90 ச.மீ கூடுதல்களுக்கும் ரூ.2,000 | ஒவ்வொரு 90 ச.மீ கூடுதல்களுக்கும் ரூ.2,000 | ஒவ்வொரு90 ச.மீ கூடுதல்களுக்கும் ரூ.2,000 |

| | அளவீடு மற்றும் கட்டணம் | |
|---|---|---|
| கைப்பிடி சுவர்கள் அமைத்தல்/ தடுப்புச் சுவர்கள் | ஒரு மீட்டருக்கு. | ரூ. 100/- |
| அத்திவாரங்களுடன் எல்லைகளை வரையறுத்தல் | ஒரு மீட்டருக்கு. | ரூ. 50/- |
| தொடர்பு கோபுரங்கள்/ஆண்டெனா டவர்ஸ்/ டிரான்ஸ்மிஷன் கோபுரங்கள் | ரூ. 30,000/- | |
| நிரப்பு நிலையங்கள் / சேவை நிலையங்கள் | புகை பரிசோதனை செய்தல் | ரூ. 25,000/- |
| | நிரப்பு நிலையங்கள் | ரூ. 75,000/- |
| | வாகன சேவை நிலையங்கள் | ரூ. 50,000/- |
| | வாகன சேவை நிலையங்கள் மற்றும் புகை பரிசோதனை | ரூ. 75,000/- |
| | நிரப்பு நிலையங்கள் மற்றும் தொடர்புடைய பிற | ரூ. 150,000/- |

| வணிக நோக்கத்திற்காக | தரைப் பகுதி (மீ2) | கட்டணம் (ரூ) |
|---|---|---|
| 1. நீச்சல் குளங்கள் (டெக்குடன்) | 300 மீ 2 வரை | ரூ. 6,000/- |
| 2. சோலார் | 301 - 500 மீ2 | ரூ. 15,000/- |
| | 501 - 1000 மீ2 | ரூ. 30,000/- |
| | 1000 மீ 2 க்கு மேல் | ரூ. 30,000, 1000 மீட்டருக்கு மேற்படுமாயின் ஒவ்வொரு கூடுதல் 100 மீ2 ரூ.1,000 |

**கைப்பிடி சுவர்கள்/ தடுப்புச் சுவர்கள் அமைத்தல்**

| | குடியிருப்பு (ஒரு மீட்டருக்கு) | வணிகம் (ஒரு மீட்டருக்கு) |
|---|---|---|
| கட்டிடக் கோட்டிற்கு வெளியே | 300.00 | 400.00 |
| கட்டிடக் கோட்டிற்குள் | 500.00 | 600.00 |

(ஆ) கட்டிட நிருமாண அனுமதிப்பத்திரம் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்காக உள்ளூராட்சி நிறுவனங்களால் அறவிடப்படுகின்ற கட்டணங்கள் (முன்கூட்டிய கட்டணம்) 2021 நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி கட்டளைகளின் 2ஆம் உப அட்டவணையில் காட்டப்பட்டுள்ள விதத்தில் இருத்தல் வேண்டும். இந்தக் கட்டணங்களை மாற்றுவதற்கு அல்லது திருத்தியமைப்பதற்கான சட்டரீதியான அதிகாரம் நகர அபிவிருத்தி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கே உள்ளது என்பதால் காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்படுகின்ற திருத்தங்கள் தொடர்பில் கவனத்துடன் இருத்தல் முக்கியமானதாகும். இந்தக் கட்டணங்களது மாற்றம் தொடர்பில் பொதுமக்கள் அறிந்து கொள்ளக்கூடிய விதத்தில் வைத்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு**: (i) நகர அபிவிருத்தி பிரதேசத்திற்கு அப்பாற்பட்ட பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்ற நிருமாணம் எனின், அறவிடப்படுகின்ற கட்டணங்களது அளவானது, சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற விதத்தில் அமைதல் வேண்டும்.

(ii) இந்தக் கட்டணங்களினது அளவை தீர்மானிக்கும்போது, நகர அபிவிருத்தி பிரதேசத்தில் அறவிடப்படக்கூடிய கட்டணங்களுக்கு விஞ்சியதாக கட்டணம் அறவிடுவதைத் தவிர்த்தல் வேண்டும்.

1. **பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டிய ஆவணங்கள்**

(அ) கட்டிட வரைபடம்- மூலப் பிரதிகள் -3
(ஆ) நடப்பு ஆண்டிற்கான மதிப்பீட்டு வரி செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு - பிரதி 1.

(இ) நில உரிமையாளரின் தேசிய அடையாள அட்டை - புகைப்பட பிரதி 1

(ஈ) 30 ஆண்டுகளுக்கான வரலாற்றுத் தாள்கள்- புகைப்படப் பிரதிகள் 1, ஆனால்

அசல் பிரதி ஆரம்ப சரிபார்ப்புக்குக் கிடைக்க வேண்டும்.

(உ) நில அளவைப்படம் - புகைப்பட பிரதி 3, ஆனால் அசல் பிரதி ஆரம்ப சரிபார்ப்புக்கு கிடைக்க வேண்டும்.

(ஊ) சட்ட ரீதியான காணி ஆவணம் ( உறுதிப்படுத்தப்பட்டது) புகைப்பட பிரதிகள் -3, ஆனால் அசல் பிரதி முதற்கட்ட சரிபார்ப்புக்கு கிடைக்க வேண்டும்.

(எ) உபபிரிவிடல் - பிரதி 1 (தேவை ஏற்படின்).

(ஏ) காணி 6 பேர்ச்களுக்கு குறைவாக இருந்தால் நகர அபிவிருத்தி அதிகாரசபை அனுமதி பெற வேண்டும் புகைப்பட பிரதிகள் - 3

(I) (1) வதிவிடம் அல்லாத கட்டடம் எனின் 400 $m^2$ க்கு மேல் நகர அபிவிருத்தி அதிகாரசபை அனுமதி பெறப்பட வேண்டும் - புகைப்பட பிரதி - 3

(2) வதிவிடக்கட்டட நிர்மாணம் எனின் 1000 $m^2$ பரப்பளவு அல்லது 15 உயரத்திற்கு அதிகமாக இருப்பின் நகர அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதி பெறப்படவேண்டும்.

(ஒ) நிலம் அரசுக்கு சொந்தமானதாக இருந்தால், பிரதேச செயலகத்திலிருந்து

நீண்டகால குத்தகை ஒப்பந்தம் பெறப்பட வேண்டும்.

(ஓ) தனியார் அல்லாத நிலத்தில் கட்டிட அனுமதி வழங்கப்பட வேண்டுமானால்,

பிரதேசசெயலக அனுமதி தேவை

(ஔ) விசேட சந்தர்ப்பங்கள் சார்ந்த தேவைப்பாடுகள்.

(I) எல்லையின் அமைக்கப்படும் கட்டடங்கள் எனின் கிராம அலுவலரினால் உறுதிப்படுத்தப்பட்ட அயலிலுள்ள அல்லது உரிமையாளரின் சம்மதக்கடிதம்

(II) காணி உரிமையாளர் அல்லாத வேறு ஒருவரினால் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படுமாயின் அற்றோனி தத்துவப்பத்திரமும் நிழற்படப்பிரதியும் சமர்ப்பிக்கப்படவேண்டும்

(III) நெற்பரப்புக் காணியில் கட்டடம் அமைப்பதாயின் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுமதிப்பத்திரம் இணைக்கப்படவேண்டும்.

(IV) சுற்றுச்சூழலுக்கு தாக்கத்தினை விளைவிக்கும் எனக்கருதும் நோக்கிலான கட்டடங்கள் எனின் மத்திய சுற்றாடல் அதிசார சபையின் சிபார்சு பெறப்படவேண்டும்.

(V) தொலைத்தொடர்பு கோபுரங்கள் அமைப்பதாயின் தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, பாதுகாப்பு அமைச்சு சிவில் போக்குவரத்து அதிகார சபையின் அனுமதிக்கடிதம்.

(VI) மத வழிபாட்டுத் தலங்கள் அமைப்பதாயின் மத விவகார அமைப்பின் அல்லது திணைக்களத்தின் அனுமதிக்கடிதம்.

(VII) கடற்கரையிலிருந்து 300 மீற்றருக்குள் கட்டடம் அமைவதாயின் கடற்கரையோர பாதுகாப்புத் திணைக்களத்தின் அனுமதி பெற்றப்படவேண்டும்.

(VIII) வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக இருப்பின் தொல்பொருள் திணைக்களத்தின் அனுமதி பெறப்படவேண்டும்.

## 2. விண்ணப்ப செயல்முறை

| செயல்முறை | கால கட்டம் | அதிகாரம் |
|---|---|---|
| கட்டிட விண்ணப்ப படிவத்தை பெற்றுக்கொள்ளல் முன் அலுவலகத்தில் அல்லது இணையத்தளத்தில் | 10 நிமிடங்கள் | விண்ணப்பதாரி |
| பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பித்தல் | பொருத்தமற்றது | விண்ணப்பதாரி |
| பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தை சரிபார்த்து ஏற்றல் | 1 மணித்தியாலம் | விடய உத்தியோகத்தரும் விண்ணப்பதாரியும் |
| வருமானப்பரிசோதகர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அறிக்கைகள் மற்றும் கள ஆய்வு அறிக்கைகளை பெறுதல் | 7 நாட்கள் | வருமானப்பரிசோதகர் தொழில்நுட்ப உத்தியோகத்தர் விடய |
| தேவை ஏற்படின் தொடர்புபட்ட திணைக்கள அனுமதியினை பெற்றுக்கொள்ளல் | 7 நாட்கள் | விடய உத்தியோகத்தர் |
| திட்டமிடல் குழுக் கூட்டம் | 7 நாட்கள் | மாநகர முதல்வர் /தவிசாளர் |
| அங்கீகரித்தல் மற்றும் பிரஜைக்கு தெரிவித்தல் | அதே நாள் | மாநகர முதல்வர் /தவிசாளர் ஆணையாளர்/செயலாளர் |

## 3. கட்டிட அனுமதியை புதுப்பித்தல்

| செயல்முறை | கால கட்டம் | அதிகாரம் |
|---|---|---|
| உரிய காலத்தில் கட்டி முடிக்கப்படாததற்கான காரணங்களைக் கூறி நீட்டிப்புக் கோரும் எழுத்து மூலமான முறையீடு செய்தல் | | விண்ணப்பதாரி |
| தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அறிக்கையை பெற்று திட்டமிடல் குழுக்கூட்டத்திற்கு சமர்ப்பித்தல் | | விடய உத்தியோகத்தர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் |
| கட்டணம் நிர்ணயிக்கப்பட்ட பிறகு ஒரு வருட காலத்திற்கு நீட்டிப்பு வழங்கப்படுகிறது | | மாநகர முதல்வர் /தவிசாளர் |

**மாதிரி சரிபார்க்கும் பட்டியல்**

**இணைப்பு: கட்டிட அனுமதி விண்ணப்பப்படிவத்தை கையேற்கும்போது சரிபார்க்க வேண்டிய விடயங்கள்**

| **………………………உள்ளூராட்சி மன்றத்தின் கட்டிட அனுமதி கையேற்கும் பரிசீலனைப்பட்டியல்** | | |
|---|---|---|
| 1. விண்ணப்பதாரியின் பெயர் …......................... | | |
| 2. விண்ணப்பதாரியின் முகவரி…......................... | | |
| 3. தொலைபேசி இலக்கம்…................................ | | |
| 4. அடையாள அட்டை இலக்கம்…..................... | | |
| 5. கட்டட விண்ணப்ப கோவை இலக்கம்…....... | | |
| 6. காணி அமைந்துள்ள இடம்…......................... | | |
| 7. வட்டாரம் …......................... | | |
| 8. கிராம சேவையாளர் பிரிவு…........................... | | |
| 9. பற்றுச்சீட்டு இலக்கம்…..................................... | | |
| **விபரம்** | **படவரைஞர்** | **கையேற்பவர்** |
| பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் | | |
| கட்டிட வரைபடம்- மூலப் பிரதிகள் -3 | | |
| பதிவுசெய்யப்பட்ட படவரைஞரின் படம் | | |
| விண்ணப்பதாரி, படவரைஞரின் ஒப்பம் | | |
| கட்டிடத்தின் அணுகுவழிகள் பாதையின் அகலம் காட்டப்பட்டுள்ளது | | |
| வரைபடம் அளவுத்திட்டத்தின்படி வரையப்பட்டுள்ளது | | |
| அத்திவார விபரம் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது | | |
| கிணற்றிற்கும் மலகூடக்குழிக்கும் இடைத்தூரம் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது | | |
| சுய அமைப்பு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது | | |
| இடிதாங்கி விபரம் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது | | |
| எல்லைச்சுவர் நீளம் தொடர்பான அட்டவணை காட்டப்பட்டுள்ளது | | |
| ஆதனவரிப்பற்றுச்சீட்டு நடப்பாண்டிற்கானது | | |
| கழிவுத்தொட்டி விபரம் வரையப்படல் வேண்டும் | | |
| புனரமைக்கப்படும் பகுதி சிவப்பு மையினால் காட்டப்பட்டுள்ளது | | |
| குறுக்கு வெட்டு தளவரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது | | |
| நடப்பு ஆண்டிற்கான ஆதன வரி செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு - பிரதி 1. | | |
| நில உரிமையாளரின் தேசிய அடையாள அட்டை - புகைப்பட பிரதி 1 | | |
| 30 ஆண்டுகளுக்கான வரலாற்றுத் தாள்கள்- புகைப்படப் பிரதிகள் ஆனால் அசல் பிரதி ஆரம்ப சரிபார்ப்புக்குக் கிடைக்க வேண்டும். | | |

| | | |
|---|---|---|
| நில அளவைப்படம் - புகைப்பட பிரதி 3, ஆனால் அசல் பிரதி ஆரம்ப சரிபார்ப்புக்கு கிடைக்க வேண்டும். | | |
| சட்ட ரீதியான காணி ஆவணம் (உறுதிப்படுத்தப்பட்டது) புகைப்பட பிரதிகள் - 3, ஆனால் அசல் பிரதி முதற்கட்ட சரிபார்ப்புக்கு கிடைக்க வேண்டும். | | |
| உபபிரிவிடல் - பிரதி 1 (தேவை ஏற்படின்). | | |
| காணி 6 பேர்ச்களுக்கு குறைவாக இருந்தால் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அனுமதி பெற வேண்டும் புகைப்பட பிரதிகள் 3 | | |
| வதிவிடம் அல்லாத கட்டிடம் எனின் 400 m2 க்கு மேல் நகர அபிவிருத்தி அதிகாரசபை அனுமதி பெறப்பட வேண்டும் - புகைப்பட பிரதி 3 | | |
| வதிவிடக்கட்டிட நிர்மாணம் எனின் 1000 $m^2$ பரப்பளவு அல்லது 15 m உயரத்திற்கு அதிகமாக இருப்பின் நகர அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதி பெறப்படவேண்டும். | | |
| நிலம் அரசுக்கு சொந்தமானதாக இருந்தால், பிரதேச செயலகத்திலிருந்து நீண்டகால குத்தகை ஒப்பந்தம் பெறப்பட வேண்டும். | | |
| தனியார் அல்லாத நிலத்தில் கட்டிட அனுமதி வழங்கப்பட வேண்டுமானால், பிரதேசசெயலக அனுமதி பெறப்பட வேண்டும். | | |
| **விசேட சந்தர்ப்பங்கள் சார்ந்த தேவைப்பாடுகள்.** | | |
| எல்லையின் அமைக்கப்படும் கட்டிடங்கள் எனின் கிராம அலுவலரினால் உறுதிப்படுத்தப்பட்ட அயலவரின் சம்மதக்கடிதம் | | |
| காணி உரிமையாளர் அல்லாத வேறு ஒருவரினால் விண்ணப்பம் சமாப்பிக்கப்படுமாயின் அற்றோனி தத்துவப்பத்திரமும் நிழற்படப்பிரதியும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | | |
| நெற்பரப்புக் காணியில் கட்டிடம் அமைப்பதாயின் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுமதி இணைக்கப்படல் வேண்டும். | | |
| சுற்றுச்சூழலுக்கு தாக்கத்தினை விளைவிக்கும் எனக்கருதும் நோக்கிலான கட்டிடங்கள் எனின் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சிபாரிசு பெறப்படல் வேண்டும். | | |
| தொலைத்தொடர்பு கோபுரங்கள் அமைப்பதாயின் தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, பாதுகாப்பு அமைச்சு சிவில் போக்குவரத்து அதிகார சபையின் அனுமதிக்கடிதம். | | |
| மத வழிபாட்டுத் தலங்கள் அமைப்பதாயின் மத விவகார அமைப்பின் அல்லது திணைக்களத்தின் அனுமதிக்கடிதம். | | |
| கடற்கரையிலிருந்து 300 மீற்றருக்குள் கட்டடம் அமைவதாயின் கடற்கரையோர பாதுகாப்புத் திணைக்களத்தின் அனுமதி பெறப்படல்வேண்டும். | | |
| வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக இருப்பின் தொல்பொருள் திணைக்களத்தின் அனுமதி பெறப்படவேண்டும். | | |

மேற்படி ஆவணங்கள் யாவும் கட்டட அனுமதி வழங்குவதற்கான பரிசீலனைக்காக என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது

விடய உத்தியோகத்தர்

பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் /பொறுப்பதிகாரி திகதி